செ.கு.எண் : 369 நாள் 19.10.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 19.10.2012

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், விஜயகரிசல்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகையா என்பவரின் வீட்டில் 28.9.2012 அன்று வெடிகள் தயார் செய்து கொண்டிருந்த போது ஏற்பட்ட வெடி விபத்தில் சாத்தூர் வட்டத்தைச் சேர்ந்த திரு.கருப்பசாமி என்பவரின் மகன் திரு. காளிராஜ், திரு ஜோதிமணி என்பவரின் மகன் திரு. பாக்கியராஜ் மற்றும் திரு. கருப்பையா என்பவரின் மகன் திரு. குமார் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்தேன்.

இந்த வெடி விபத்தில் அகால மரணமடைந்த திரு. காளிராஜ், திரு. பாக்கியராஜ் மற்றும் திரு. குமார் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. காளிராஜ், திரு. பாக்கியராஜ் மற்றும் திரு. குமார் ஆகியோரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9